உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 10.06.2026 • மலர் 04 • இதழ்: 161 • புதன்கிழமை • Edition : Nagercoil • 10.06.2026 • Vol : 04 • Issue : 161 • Page : 4 • Rs. 5/-

### அன்று.. இந்திரா, இன்று.. நேரு

# நீண்ட நாள் பிரதமர் சாதனையை முறியடிக்கும் நரேந்திர மோடி

புதுடெல்லி, ஜூன் 10

ஆங்கிலேய ஆட்சி அதிகாரத்தில் இருந்து 1947ம் ஆண்டு ஆகஸ்டு 15ந் தேதி இந்தியா விடுபட்டது. அன்று தொடங்கி, முதல் நாடாளுமன்ற தேர்தல் வரை ஜவஹர்லால் நேரு பிரதமராக நியமிக்கப்பட்டார்.

அவ்வாறு பிரதமராக நியமிக்கப்பட்ட போதிலும், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமராக இல்லாமல் இடைக்கால அரசாங்கத்தின் தலைவராகவே இருந்தார்.

நாடாளுமன்ற மக்களவை தேர்தலில் அவர் வெற்றி பெற்ற பிறகு, நாட்டின் முதல் பிரதமரானநேரு1952ம்ஆண்டு மே மாதம் 13ம் தேதி முதன்முதலாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமராக பதவியேற்றார். அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமராக தொடர்ச்சியாக 4,398 நாட்கள் பணியாற்றினார். அதாவது, 1964ம் ஆண்டு மே 27ம் தேதி தனது மரணம் வரைநேருபிரதமராகவே நீடித்தார்.

அவருடைய, நீண்ட கால பிரதமர் சாதனையை பிரதமர் நரேந்திர மோடி (செவ்வாய்கிழமை) சமன் செய்கிறார். இன்று (புதன்கிழமை) முறியடிக்கிறார்.

கடந்த 2014ம் ஆண்டு மே 26ம் தேதி நாட்டின் பிரதமராக மோடி பதவியேற்றார். அன்று முதல் தற்போது வரை அவர் 3வது முறையாக தொடர்ந்து பிரதமராக நீடித்து வருகிறார். இவ்வாறு அவர் பிரதமராக தொடர்ந்த நேரத்தில், கடந்த 2025ம் ஆண்டு ஜூலை 25ம் தேதியன்று, முன்னாள் பிரதமர் இந்திராகாந்தியின் சாதனையை முறியடித்தார்.



நாட்டின் பிரதமராக இந்திராகாந்தி, 1966ம் ஆண்டு ஜனவரி 24ம் தேதி முதல் 1977ம் ஆண்டு மார்ச் 24ம் தேதி வரை 4,077 நாட்கள் பதவியில் இருந்தார். அந்த சாதனை முறியடிக்க ப்பட்ட ஓராண்டிலேயே, இப்போது நேருவின் சாதனையையும் இன்று (ஜூன் 10ம் தேதி) பிரதமர் மோடி முறியடிக்க இருக்கிறார்.

இன்றுடன் 4,399 நாட்கள் பிரதமராக பதவியில் நீடித்த முதல் பிரதமர் என்ற பெருமையை நரேந்திரமோடி பெறுகிறார். இதன் மூலம் 4,398 நாட்கள் பிரதமராக இருந்த நேருவின் சாதனையை முறியடிக்கப்படுகிறது. அதாவது, 62 ஆண்டு கால நேருவின் சாதனை முறியடிக்கப்பட்டுள்ளது. பிரதமர் நரேந்திர மோடியின் இந்த வரலாற்று சாதனை அரசியல் வரலாற்றில் மிகப் பெரிய மைல்கல்லாக இருக்கும்.



### களியக்காவிளை அருகே

## உலக பெருங்கடல் தினத்தையொட்டி மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி

களியக்காவிளை, ஜூன்.10

கிளீன்சீ பவுண்டேஷன் மற்றும் சூரியகோடு புனித எப்ரேம்ஸ் எம்.எஸ்.சி மேனிலைப் பள்ளி இணைந்து உலக பெருங்கடல் தினம் கொண்டாடப்பட்டது.. இதில் மாணவர்கள் 324 பேரும் மாணவிகள் 231 பேர் என மொத்தம் 555 மாணவ மாணவிகளுக்கு கடல் பற்றிய விழிப்புணர்வு வழங்க பட்டது.

பள்ளி மாணவர்களுக்கு கடல்கள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் பள்ளியின் தாளாளர் அருட்தந்தை மரிய ஜாண், தலைமையாசிரியர் அருட்சகோதரி ஆன்றோ மரியா, மேலாளர் அருட்தந்தை அருள்தாஸ், இருபால் ஆசிரியர் மற்றும் அலுவலக பணியாளர்கள் மிக சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்கள்.

கடலின் நன்மைகள், அதன் மாற்றங்கள் மற்றும் கடலின் மாசுபாடு பற்றிய விழிப்புணர்வு தகவல்கள் கிளீன் சீ பவுண்டேஷன் சார்பாக அதன் நிறுவன தலைவர் தங்கமணி, துணை தலைவர் ஆன்றனி மிக்கேல், செயற்குழு உறுப்பினர்கள் ஆபிரகாம் லிங்கன் மற்றும் பிரான்சிஸ்கால் சந்திரா ஆகியோர் வழங்கினர். மேலும் இந்நிகழ்வில் பொது செயலாளர் கின்ஸ்டன் பிரவின் ராஜ், செயலாளர் கலீல் றகுமான் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் விஜய சோபா,அர்வின்ஷா,புருசோத்தம தாஸ், சந்திரன், தாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இறுதியில் மாணவ மாணவிகள், ஆசிரியர்கள் மற்றும் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவரும் கடல்களின் இயற்கை அழகை பாதுகாக்கவும், தூய்மையை மேம்படுத்தவும் மேலும் நெகிழிப் பயன்பாட்டை குறைத்து கடற்கரை சுற்றுச்சூழலை பாதுகாக்கவும் உறுதிமொழி ஏற்றுக் கொண்டு நிகழ்ச்சி நிறைவடைந்தது.

### களியக்காவிளையில்

## 50 கண்காணிப்பு கேமராக்கள் திறந்த எஸ் பி



களியக்காவிளை, ஜூன்.10

கன்னியாகுமரி மாவட்டம் தமிழக கேரள எல்லை பகுதியான களியக்காவிளை காவல்நிலைத்துக்குட்பட்ட பகுதிகளில் சட்டவிரோத செயல்பாடுகளை கண்டறிந்து தடுக்கும் வகையில் 50 கண்காணிப்பு கேமரா செயல்பாட்டினை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் துவக்கி வைத்தார்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின், குமரி மாவட்டத்தில் குற்றச்செயல்களை தடுக்கும் நோக்கில் அனைத்து கிராமங்களிலும் ஊர்க்காவலன் திட்டத்தினை செயல்படுத்தினார்.அதில் ஒரு பகுதியாக குமரி மாவட்டத்தின் அனைத்து காவல் நிலையத்திற்கு உட்பட்ட பகுதிகளில் கண்காணிப்பு கேமராகள் பொருத்தும் திட்டத்தையும் கொண்டு வந்தார். குற்ற செயல் நடந்த பின் தடுப்பதை விட குற்ற செயல் நடக்காமல் தடுப்பதே இதன் நோக்கம் ஆகும். ஊர்க்காவல் படை திட்டத்தில் குமரி மாவட்டத்தில் இதுவரை 2850 கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக களியக்காவிளை காவல் நிலையத்திற்கு உட்பட்ட பகுதிகளில் 50 கலைப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு அதன் செயல்பாட்டை மாவட்ட கண்காணிப்பாளர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இதன் மூலம் இரு மாநில எல்லைகளுக்கு இடையே நடைபெறும் குற்ற செயல்களை கண்டறிய காவல்துறைக்கு எளிதாக இருக்கும் என எஸ் பி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்

### வட்டார வேளாண் விரிவாக்க மையங்களில்

## பிரதம மந்திரியின் கவுரவ நிதி திட்ட சிறப்பு முகாம்




தஞ்சாவூர் ஜூன் 10

வட்டார வேளாண் விரிவாக்க மையங்களில் பிரதம மந்திரியின் கவுரவ நிதி திட்ட சிறப்பு முகாம் நடக்கிறது

தஞ்சாவூர் மாவட்டகலெக்டர் ரேவதி வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது

தஞ்சாவூர் மாவட்டத்தில் பிரதம மந்திரி கௌரவ நிதி உதவி திட்டத்தின்கீழ் தகுதி உடைய விவசாயிகள் முழுமையாக பயன்பெறவும் பல்வேறு காரணங்களால் தவணை த் தொகை நிறுத்தம் செய்யப்பட்ட பயனாளிகள் மீண்டும் திட்டத்தில் இணைந்து பயன் பெறவும் மாவட்ட முழுவதும் சிறப்பு முகாம் நடை பெறுகிறது

பிரதம மந்திரி கவுரவ நிதி உதவி திட்டத்தின் கீழ் வங்கி கணக்குடன், ஆதார் எண்ணை இணைக்காத 3,070 விவசாயிகள் மின்னணு கேஒய்சி பதிவு செய்யாத 1,174 விவசாயிகள், ஆதார் எண் மற்றும் மின்னணு கே.ஒய். சி பதிவு செய்யாத 252 விவசாயிகள் தொடர்ந்து திட்டத்தின் பலனை பெற முடியாத நிலையில் உள்ளனர்

தகுதி உடைய அனைத்து விவசா யிகளும் வட்டார அளவில் நடை பெறும் பிரதம மந்திரி கவுரவ நிதி உதவி திட்ட சிறப்பு முகாம் களில் பங்கேற்று தங்களின் ஆவணங் களில் உள்ள குறைபாடுகளை சரி செய்து திட்டத்தின் பயன் பெற லாம்

இதற்காக தஞ்சாவூர் மாவட்டத் தில் உள்ள வட்டார வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தில் வேளாண்மைதுறை, தோட்டக்கலைத்துறை, வேளாண் வணிகத் துறை மற்றும் வருவாய் துறைகளு டன் இணைந்து நடைபெறும் முகாம்களில் விடுபட்ட விவரங் களை பதிவு மேற்கொள்ள வேண் டும்

இந்த முகாம் 10, 12,15 தேதிகளில் அந்தந்த வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் நடைபெறும். பிரதம மந்திரி கவுரவ நிதி உதவி திட்டத்தின் 23வது தவணை ஜூலை மாதத்தில் வழங்கப்பட உள்ள நிலையில், நில ஆவண விவரங்கள் புதுப்பித்தல் வங்கி கணக்குடன் ஆதார் இணைப்பு, மின்னணு கேஒய்சி பதிவு உள்ளிட்ட தகவல்களை சரி செய்ய வேண்டிய வேண்டியது அவசியம் .இதன் மூலம் விடுவிக்க ப்பட்ட தகுதியான விவசாயிகள் திட்டத்தின் புதிதாக தொடர்ந்து பயனடைய முடியும் .மேற்கண்டவாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது. முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

### தஞ்சாவூருக்கு அருகே

## வயலில் சரக்கு வேன் கவிழ்ந்து 26 பேர் காயம்; எம்பி, எம்எல்ஏ நேரில் ஆறுதல்



தஞ்சாவூர் ஜூன் 10

தஞ்சாவூர் அருகே வயலில் சரக்கு வேல் கவிழ்ந்ததில் 26 பேர் காய மடைந்தனர்

தஞ்சாவூரை அடுத்துள்ள நடுக்காவேரி அருகே அந்தலி கிராமத்தைச் சேர்ந்த சுமார் 35 பேர் திருப்பந்துருத்தியில் நடந்த துக்க நிகழ்ச்சிக்கு செல்வதற்காக சரக்கு வாங்கி ஏறி சென்று கொண்டிருந் தனர். அந்தலி அருகே சென்ற இந்த சரக்கு வேன் சாலை வளைவில் திரும்பிய போது டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து, சாலை யோர வயலில் கவிழ்ந்தது

இதில் சரக்கு வேனில் பயணம் செய்த மணிமேகலை, கலிய மூர்த்தி, பாரதி, சரிதா, மகேஸ்வரி, பிரவீணா, தமிழ்ச் செல்வி, கண்ண ன், மின்னல் கொடி, செல்வி, சுமதி சிந்துஜா, விஜயகுமார், காளியம் மாள் ,சாவித்திரி ,கிருஷ்ணவேணி ரமணி, சரத்குமார் ,அபிராமி உள்பட 26 பேர் காயமடைந்தனர். உடனே காயம் அடைந்தவர்களை அக்கம் பக்கத்தினர் மீட்டு நடுக்காவேரி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கொண்டு சென்றனர்.

அங்கு அவர்களுக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் அவர்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சேர்க்கப்பட்டனர் அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இது குறித்து நடுக்காவேரி போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் முகமது நிவாஸ், சிறப்பு சப் இன்ஸ்பெக்டர் வேதி தாசன், ஏட்டுகள் வினோத், பாஸ்கள் ஆகியோர் தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனை க்கு நேரில் வந்து விசாரணை நடத்தினர்.

இதனிடையே தஞ்சாவூர் மருத்து வக் கல்லூரி மருத்துவமனை யில் சிகிச்சை பெற்று வருபவர்களை முரசொலி எம்பி ,துரை சந்திரசேகர ன் எம்எல்ஏ ஆகியோர் நேரில் சந்தித்து ஆறுதல் கூறி மருத்துவர்களிடம் சிகிச்சை குறித்து கேட்டறிந்தனர்.

### தஞ்சாவூர்

## கம்பன் கழகத்தலைவராக வழக்குரைஞர் எஸ்.எஸ்.ராஜ் குமார் தேர்வு



தஞ்சாவூர். ஜூன்.10

தாய் மொழி மட்டுமல்ல, மொழி களின் தாயாக விளங்கும் மொழி நம்தமிழ் மொழி.அந்த தமிழ் மொழியின் தனித்துவத்தை தனது அடையாளமாக தனது மொழி நயத்தாலும் கற்பனை வளத்தாலும் அதன் சுவையாலும் எல்லோரையும் ஈர்த்த பெருங்கவிஞன் கம்பன். அந்தக் கம்பன் வடித்த காவியம் இராமாயணம். கம்பராமாயணத்தையும் கம்பனையும் போற்றும் வகையில் உலகெங்கிலும் கம்பன் கழகம் என்ற அமைப்பு உருவாக்கப் பட்டு நம் மொழியும்

நமது கலாச் சாரமும் முன்னெடுத்துச் செல்லப் பட்டு மொழிக்கு பெருமை சேர்க்கப்பட்டு வரும் நிலையில் அதன் ஒரு பகுதி யாக 28 ஆண்டுகளுக்கு முன்பே தஞ்சாவூரில்பல தமிழ் அறிஞர் களின் முயற்சியால் நிறுவப்பட்டு மறைந்த மேனாள் அமைச்சர் உபயதுல்லா தலைமையில் தொடர்ந்து இயங்கி தமிழ்ப்பணி யை செய்து வந்தது கம்பன் கழகம்

இந் நிலையில் அவர்களின் இழப்பை அடுத்து ஏற்கெனவே அவர்கள் முன்மொழிந்ததன் படி சிறந்த செயற்பாட்டாளரும் நிர்வாகத் திறனா ளரு மான மனித நேயப் பண்பாளர் வழக்குரைஞர் எஸ்.எஸ்.ராஜ் குமார் தஞ்சாவூர் கம்பன் கழகத்தின் அனைத்து உறுப்பினர்களின் அன்பான அழைப்பை ஏற்றுக்கம்பன் கழக நிர்வாகிகள் தேர்வில் கலந்து கொண்டார். வழக்குரைஞர் எஸ்.எஸ்.ராஜ்குமார் தலைவராக ஒருமனதாக தேர்ந்தெடுக்கப் பட்டார். பொறுப்பை ஏற்று அவர் உரையாற்றும் போதுகம்பன் கழகத்தை மேம்படுத்தும் பலவகையான ஆலோசனைகளை வழங்கி கழகத்திற்கு தனது முழு ஒத்துழைப் பையும் வழங்குவதாக உறுதியளித்தார்

## தருமபுரி மாவட்டத்தில்
# கள்ளச்சாராயம் போதைப்பொருள் மற்றும் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் ஒழிப்பு தொடர்பாக அதிகாரியுடன் ஆட்சியர் ஆய்வு கூட்டம்



தருமபுரி ஜூன் 10

தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக குறிஞ்சி கூட்டரங்கில் கள்ளச்சாராயம் கண்காணித்தல் ஒழித்தல் மற்றும் போதைப்பொருட்கள், தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் ஒழிப்பு தொடர்பான ஆய்வு கூட்டம் மாவட்ட ஆட்சியர் சரவணன் தலைமையில் நடைபெற்றது. தருமபுரி மாவட்டத்தில் கள்ளச்சாராயம் ஒழிப்பு, சட்டவிரோத மதுபான விற்பனை தடுப்பு, போதை பொருட்கள் மற்றும் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் ஒழிப்பு தொடர்பாக பல்வேறு துறை அலுவலர்களுடன் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் முக்கிய ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன. கூட்டத்தில் அரசு மதுபானங்களை சட்ட விரோதமாக சந்து கடைகள் மூலம் விற்பனை செய்வதை தடுக்க தீவிர கண்காணிப்பு மேற்கொள்ள வேண்டுமென மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தினார். மேலும் கல்வி நிலையங்களை ஒட்டி உள்ள மளிகை கடைகள் மற்றும் பிற வணிக நிறுவனங்களில் போதைப்பொருட்கள் மற்றும் புகையிலை பொருட்கள் விற்பனை செய்யப்படுவதை தடுக்க தொடர்ந்து ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தினார். தடை செய்யப்பட்ட பொருட்கள் விற்பனை செய்யப்படுவது கண்டறியப்பட்டால் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட ரீதியான கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கப்பட்டது. மேலும் மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை பயன்படுத்துவதில்லை என்ற விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை கட்டாயம் வைக்க வேண்டுமென தொடர்புடைய அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தினார். இந்த ஆய்வுக் கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மகேஸ்வரன், உதவி ஆணையர் கோபு, மதுவிலக்கு அமல் பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் சந்திரசேகரன் , மாவட்ட நியமன அலுவலர் கைலாஷ் குமார் உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தருமபுரி மாவட்டம் பாலக்கோடு உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளராக செல்வி T. மாலதி பொறுப்பேற்று கொண்டார்.

## திருச்சி
# போதை ஊசி பயன்படுத்திய இளம் பெண் மரணம்



திருசி, ஜூன் 10

திருச்சி அரியமங்கலம் பகுதியைச் சேர்ந்த யாஸ்மின் (18) என்பவர், சதாம் உசேன் (19) மற்றும் ஷேக் அப்துல்லா (19) ஆகியோருடன் சேர்ந்து திருச்சி ஜங்ஷன் அருகே உள்ள லாட்ஜில் போதை ஊசியைப் பயன்படுத்தியதாகக் கூறப்படுகிறது. இதில் யாஸ்மின் திடீரென மயக்கமடைந்துள்ளார். அவரை இருவரும் திருச்சி அரசு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். அங்கு சிகிச்சை பலனின்றி யாஸ்மின் உயிரிழந்தார். இது குறித்து தகவலறிந்து வந்த கன்டோன்மெண்ட் காவல் நிலைய போலீசார், சதாம் உசேன் மற்றும் ஷேக் அப்துல்லா ஆகிய இருவரையும் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## தருமபுரி மாவட்ட உணவு பாதுகாப்புத்துறை சார்பாக
# தருமபுரி அவ்வையார் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 'உலக உணவு பாதுகாப்பு தின விழா'



தருமபுரி ஜூன் 10

தருமபுரி மாவட்ட உணவு பாதுகாப்பு துறை சார்பாக தருமபுரி அவ்வையார் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் பள்ளி தலைமை ஆசிரியர் சுதா, ஒருங்கிணைப்போடு 'உலக உணவு பாதுகாப்பு தின விழா' நடைபெற்றது. தருமபுரி மற்றும் பென்னாகரம் ஒன்றிய உணவு பாதுகாப்பு அலுவலர் நந்தகோபால் வரவேற்பு முன் உரையுடன், பள்ளி உதவி தலைமை ஆசிரியர் முருகன் , பட்டதாரி ஆசிரியை கிரிஜா , இசை ஆசிரியை சாய் விஜயலட்சுமிஆகியோர் முன்னிலையில் உணவு பாதுகாப்பு துறை மாவட்ட நியமன அலுவலர் மருத்துவர். கைலாஷ்குமார் தலைமையில் "உலக உணவு பாதுகாப்பு தினம் 7 ஜுன் 2026" விழிப்புணர்வு அனுசரிக்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் ஜூன் ஏழாம் தேதி உலக உணவு பாதுகாப்பு தினமாக ஒரு கருப்பொருளுடன் அனுசரிக்கப்படுகிறது. இவ்வாண்டும் "சுமையிலிருந்து தீர்வு வரை எங்கும் பாதுகாப்பான உணவு" அதாவது "From burdon to solutions safe food everywhere"என்ற கருப்பொருள் உடன் உலக உணவு பாதுகாப்பு தின விழா அனுசரி க்கப்படுகி றது.

மாவட்ட நியமன அலுவலர் மருத்துவர் கைலாஷ் குமார், தலைமை உரையில் பாதுகாப்பற்ற உணவுகளை உண்பதால் உலக சுகாதார நிறுவன (World Health Organization) கூற்றின்படி உலக அளவில் ஆண்டுதோறும் 86.6 கோடி பேர் உடல்நலம் குறைவால் பாதிக்கப்படு கின்றனர். மேலும் 1.5 லட்சம்பேர் ஆண்டு தோறும் உயிரிழப்பை எதிர் நோக்குகின்றனர். ஆகவே நாம் பாதுகாப்பான உணவவை உறுதி செய்ய ஐந்து விஷயங்களை (5C Cleaning, Cooking ,Chilling, Cross contamination prevented and Communication) முக்கியமாக பின்பற்ற வேண்டும் என இந்திய உணவு பாதுகாப்பு தர நிர்ணய ஆணையம் வலியுறுத்து கின்றது.

அவை தன் சுத்தம், சமையலறை மற்றும் சுற்றுப்புறசுத்தம், பாதுகாப்பான உணவிற்கான அனைத்து வழிகளை பின்பற்றுதல், உணவை உட்கொள்ளும் முன் அது கலப்படம் இல்லாமலும் கெட்டுப் போகாமல் இருப்பதை உறுதி செய்தல் மேலும் நீங்கள் உண்ணும் உணவை பற்றிய தகவல்களை விபரச்சீட்டில் இருந்து அறிந்து கொள்ளுதல் ஆகியவை முக்கியமான ஐந்து தூண்கள் ஆகும் .இவற்றை கடைபிடித்தாலே உடல் நல்ல ஆரோக்கியத்துடன் பாதுகாப்பான முறையில் வாழலாம் எனவும் தற்சமயம் அறிவியல் பூர்வமான வகையில் உணவுப் பொருட்களை ஆராய்ந்து பாதுகாப்பான உணவை தேர்ந்தெடுத்து உடல் நலத்தை பேணி காக்கலாம் என விழிப்புணர்வு செய்தார். மேலும் நிகழ்வில் ஒன்றிய உணவு பாதுகாப்பு அலுவலர் நந்தகோபால் பொட்டலம் இடப்பட்ட உணவுப் பொருட்களின் லேபிள்களில் காண வேண்டிய அம்சங்கள் குறித்து அதாவது உணவு பொருள் பெயர் , தயாரிப்பு முகவரி , தயாரிப்பு தேதி, முடிவு தேதி , நுகர்வோர் தொடர்பு எண், உணவு பாதுகாப்பு உரிமை எண் மேலும் சைவ , அசைவ குறியீடுகள் உணவு பொருள் உட்காரணிகள், அலர்ஜி தன்மை, ஊட்டச்சத்து தகவல்கள் குறித்து உரிய பொருட்களுடன் நேரடி செயல் விளக்கம் அளித்ததுடன் உணவுப் பொருட்கள் சிலவற்றின் வீட்டு அளவிலேயே கலப்படம் கண்டறிந்தல் குறித்து குறிப்பாக தேயிலை, தேன், சமையல் எண்ணெய் ,நெய், மஞ்சள் தூள் ,மிளகு, வெல்லம், செர்ரிபழம் உள்ளிட்டவற்றில் கலப்படம் கண்டறி தல் குறித்து உணவு பொருட்களை கொண்டு நேரடி செயல் விளக்கம் அளித்தார். விரைவாக உணவு பாதுகாப்பு சார்ந்து சுகாதாரம் தரம் கட்டுப்பாடு மற்றும் வீண் விரயம் தவிர்த்தல் உணவு பாதுகாப்பு அவசியம் குறித்து மற்றவர்களுக்கும் எடுத்துரைப்பேன் என 800 க்கும் மேற்பட்ட மாணவிகள் உறுதிமொழி ஏற்றனர். நிகழ்வில் பள்ளி உயர்கல்வி இயக்குனர் தங்கரத்தினம் ஆசிரியை அருள் செல்வி, உள்ளி ட்டோருடன் இருபால் ஆசிரியை, ஆசிரி யர்களுடன் மாணவிகள் திரளாக பங்கேற்றனர்.

## விளாத்திகுளம் அருகே
# எஸ். அருணாச்சலபுரத்தில் விவசாயிகளுக்கு மாவட்ட அளவிலான பயிற்சி முகாம்



விளாத்திகுளம் ஜூன் 10.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள எஸ்.அருணாச்சலபுரத்தில் விவசாயிகளுக்கு மாவட்ட அளவிலான பயிற்சி முகாம் நடைபெற்றது.

புதூர் வேளாண் உதவி இயக்குனர் சுப்புலட்சுமி சிறப்பு உரையாற்றி முகாமை தொடங்கி வைத்தார்.ஸ்காட் ஒருங்கிணைந்த வேளாண் அறிவியல் மையத்தின் தொழில் நுட்ப வல்லுநர் முத்துக்குமார் பயிர்களின் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பற்றியும், துணை வேளாண் அலுவலர் சின்னச்சாமி உயிர் உரங்கள் மற்றும் நுண்ணுயிர் உரங்கள் பற்றியும் விவசாயிகளிடம் எடுத்துரைத்தனர். முகாமில் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

முகாமிற்கான ஏற்பாடுகளை ஆத்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் வேல்முருகன், முனியசாமி ஆகியோர் செய்திருந்தனர்.

## திருச்சி
# நீதிமன்ற வளாகத்திற்கு வெடிகுண்டு மிரட்டல்



திருச்சி, ஜூன் 10

திருச்சி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்திற்கு நேற்று வெடிகுண்டு வைத்திருப்பதாகவும், சில மணித்துளிகளில் அது வெடிக்கப் போவதாகவும் மின்னஞ்சல் மூலம் மிரட்டல் விடுக்கப்பட்டது. இதை அடுத்து, நீதிமன்ற ஊழியர்களின் புகாரின் பேரில், போலீசார் வெடிகுண்டு நிபுணர்களுடன் சம்பவ இடத்தில் சோதனை மேற்கொண்டனர். கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கும் இதேபோல் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்ட நிலையில், தற்போது நீதிமன்ற வளாகத்திற்கு விடுக்கப்பட்டுள்ள இந்த மிரட்டல் சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட, போச்சம்பள்ளி ஊராட்சி, கோணனூர், பழனி ஆண்டவர் நகரில், ரூ.3 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்க கட்டுமான பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டு, கட்டுமான பொருட்களின் தரத்தை ஆய்வு மேற்கொண்டார். உடன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் .கவிதா, துணைஆட்சியர்பயிற்சி.சாய்சைதன்யாஜாதவ் ஊரகவளர்ச்சித்துறைசெயற்பொறியாளர் .மோகன சுந்தரம் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## தருமபுரி நகராட்சியில்
# தூய்மை பணியாளர்களின் தினக்கூலியை ஏமாற்றும் ஒப்பந்ததாரர் மீது நடவடிக்கை கோரி சிஐடியு ஆர்ப்பாட்டம்



தருமபுரி ஜூன் 10

தருமபுரி நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களின் தினக்கூலியை ஏமாற்றி வரும் ஒப்பந்ததாரர் மீது நடவடிக்கை எடுக்க கோரி சிஐடியு தருமபுரி மாவட்ட ஊரக வளர்ச்சி, உள்ளாட்சித்துறை ஊழியர்கள் சங்கத்தினர் தருமபுரி நகராட்சி அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தருமபுரி நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு அரசாணை எண். 2டி, 62ன் படி நபர் ஒருவருக்கு வழங்க வேண்டிய தினக்கூலி ரூ.745 ஆகும்.தற்போது ஒப்பந்ததாரர் வழங்குவது நாளோன்றுக்கு ரூ.410 மட்டுமே வழங்கி வருகிறது. ஒரு தூய்மைபணியாளருக்குஒருநாளைக்கு ரூ. 335 வீதம் ஏமாற்றி வருகின்றனர்.

மாதத்திற்கு ரூ. 10,050 ஏமாற்றி வருகின்றனர். 13 மாத காலமாக ஏமாற்றியதில் ஒரு தொழிலாளிக்கு ஒரு லட்சத்து முப்பதாயிரம் ரூ.1,30,000 பாக்கி உள்ளது. 130 ஒப்பந்த தூய்மை தொழிலாளர்களிடம் இந்த தொகை ஏமாற்றப்பட்டுள்ளது.

கடந்த ஓராண்டில் மட்டும் தொழிலாளியிடம் ஏமாற்றப்பட்ட தொகையான ஒரு கோடியே எழுபது லட்சத்தை ரூ.1,70,000,00 உடனே திருப்பி வழங்க வேண்டும். மாவட்ட நிர்வாகமும் தமிழக அரசும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு சங்கத்தின் மாவட்ட துணைத்தலைவர் சி. குட்டியப்பன் தலைமை வகித்தார். சிஐடியு மாநில துணைத்தலைவர் சி. நாகராசன், மாவட்ட பொருளாளர் எஸ். சண்முகம், மாவட்ட துணைத்தலைவர்கள் சி. ரகுபதி,சி. அங்கம்மாள், சங்கத்தின் மாவட்ட செயலாளர் ஏ. சேகர், பொருளாளர் மணிகண்டன் மாவட்ட நிர்வாகிகள் எம். வெங்கட்டேசன், ஜி. வள்ளி, ஏ. சத்யா, ஏ. சின்னசாமி, வி. சிவா, ஜி. ராஜேஸ்வரி ஆகியோர் பேசினர்.

## திருச்சியில்
# நயினார் தலைமையில் பாஜக கூட்டம்



திருச்சி, ஜூன் 10

திருச்சி மாவட்ட பாஜக அலுவலகத்தில் நேற்று தமிழ்நாடு மாநில பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தலைமையில், மாநிலத் துணைத் தலைவர்கள், பாஜக பிரிவு அணி தலைவர்கள் உள்ளிட்ட 200க்கும் மேற்பட்ட நிர்வாகிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழிசை சௌந்தர்ராஜன், கே.டி. ராகவன், சுதாகர் ரெட்டி, வானதி சீனிவாசன், ராம சீனிவாசன் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தில் கட்சியின் எதிர்கால திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

# விஐபி புதிய மூன்று ரக பைகள் (பிரிஃப்கேஸ்) தயாரிப்பு அறிமுகம்




சென்னை, ஜூன் 10

ஆசியாவின் மிகப்பெரிய லக்கேஜ் பை உற்பத்தியாளர்களில் முதன்மை பிராண்டாக விளங்கும் விஐபி இண்டஸ்ட்ரீஸ் நவீன இந்தியப் பயணிகளின் மாறிவரும் தேவைகளுக்குதக்கவகையில் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட மூன்று தனித்துவமான பயணப் பை தொகுப்பான தனது 'டிராவல் விஐபி' எனும் புதிய தயாரிப்பை அறிமுகப்படுத்துகிறது.

பயணங்கள் ஒரு நவீன கால வாழ்க்கை முறையாகவும், பயண லக்கேஜ் பைகள் அதன் ஒரு அடையாளமாகவும் மாற்றம் காணுவதற்கு வெகு நீண்ட காலத்திற்கு முன்பே, விஐபி தனது இருப்பை இந்தத் துறையில் வேரூன்றி நிலை நாட்டியிருந்தது. மேலும் பயணத்தின் போது நீங்கள் எடுத்துச் செல்லும் பொருட்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதோடு மட்டுமல்லாமல் அதற்கான ஒரு சரியான பயணப் பை என்பது ஒதுக்கித் தள்ளவோ அல்லது பின் யோசனை அடிப்படையில் தேர்வு செய்ய வேண்டிய ஒன்றோ இல்லை என்பதை நிலைநிறுத்தி மாறாக அது ஒரு சிறந்த பயணத்தின் தொடக்கம் என்ற கருத்தியலை இந்தியாவிற்கு முதல் முதலாக அறிமுகப்படுத்திய பிராண்ட் ஆகும். தற்போது அறிமுகப்படுத்தப்படும் நவீன பயண அனுபவங்களை மையமாக நிலை நாட்டும் வகையில் விஜபி கிளாசிக், விஐபி ஃபிளெக்ஸ் மற்றும் விஐபி பாட் போன்ற தயாரிப்புக்கள் இந்தத் தொகுப்பில், அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்தியர்கள் தங்கள் பயணங்களை உண்மையில் எவ்வாறு மேற்கொள்கிறார்கள் என்பதை மையமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்ட டிராவல் விஜபி (Travel VIP) பிரச்சாரம் என்பது இதுவரையில் இல்லாத வகையில் நுகர்வோரின் ஆழ்ந்த புரிதலில் இருந்து உருவான ஒரு தொகுப்பின் முழுமையான வெளிப்பாடாகும்

# அமைச்சர் ராஜேஷ்குமாருக்கு எதிராக த வெ க வேட்பாளர் சபின் திடீர் புகார்

## வெற்றி செல்லாது என்று அறிவிக்க கேட்டு தேர்தல் அதிகாரிகளுக்கு புகார்

நாகர்கோவில், ஜூன், 10

தமிழகத்தில் நடைபெற்று முடிந்த சட்டமன்றத் தேர்தலில் குமரி மாவட்டம் கிள்ளியூர் சட்டமன்ற தொகுதியில் திமுக கூட்டணியில் இடம் பெற்ற காங்கிரஸ் கட்சிக்கும் தவெக கட்சிக்கும் கடும் போட்டி நிலவியது. இதில் காங்கிரஸ் வேட்பாளர் ராஜேஷ்குமார் த வெக வேட்பாளர் சபின் ஆகியோர் வாக்கு எண்ணிக்கையின் போது மாறி மாறி முன்னிலை வகித்தபடி இருந்தனர். இதனால் இருவரில் யார் வெற்றி பெறுவார்? என்று எதிர்பார்ப்பு வாக்குப்பதிவு தொடங்கியது முதல் முடியும் வரை காணப்பட்டது. இறுதியில் காங்கிரஸ் வேட்பாளர் ராஜேஷ்குமார் 66,434 வாக்குகளும் தவெக வேட்பாளர் 65 123 வாக்குகளும் பெற்றனர்.



இதனால் 1316 வாக்குகள் வித்தியாசத்தில் ராஜேஷ் குமார் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

அதே நேரத்தில் தமிழகத்தில் ஆட்சி அமைக்க தவெகவுக்கு போதிய மெஜாரிட்டி இல்லாத காரணத்தால் ஆட்சி அமைப்பதில் சிக்கல் ஏற்பட்டது. இந்த சூழலில் காங்கிரஸ் கட்சி திமுக கூட்டணியில் இருந்து வெளியேறி தவெக கூட்டணியில் இணைந்து, மேலும் சில கட்சிகள் ஆதரவு அளித்ததால் தவெக ஆட்சி அமைத்தது. இதில் கிள்ளியூரில் வெற்றி பெற்ற காங்கிரஸ் வேட்பாளர் ராஜேஷ்குமாருக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட்டது.

இந்த நிலையில் அமைச்சர் ராஜேஷ் குமாரின் வெற்றிக்கு எதிராக தேர்தலில் அவரை எதிர்த்து போட்டியிட்ட குமரி மேற்கு மாவட்ட த வெக செயலாளரான சபின் புகார் மனு அளித்துள்ளார். அவர் குமரி மாவட்ட தேர்தல் அதிகாரியாக செயல்பட்ட மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நேரில் சென்று தனது புகார் மனுவை கொடுத்திருக்கிறார். மேலும் அவர் சட்டமன்றத் தேர்தல் அதிகாரி, மாநில தேர்தல் அதிகாரி, சட்டமன்ற செயலர் மற்றும் தலைமை தேர்தல் ஆணையருக்கும் தனது புகார் மனுவை கடிதமாக அனுப்பி உள்ளார்.

அவர் தனது மனுவில், ஏராளமான தபால்வாக்குகள்என்னபப்டவில்லை. ஒரு வாக்குச்சாவடியில் 6 மணிக்கு முன்னதாகவே வாக்குப்பதிவு தொடங்கியது. ஒரு வாக்கு சாவடியின் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டது. 5 சுற்றுகளின் வாக்கு எண்ணிக்கை வெளிப்படையாக நடக்கவில்லை. வாக்கு எண்ணிக்கை தொடர்பாக ஆட்சேபனைகள் தெரிவித்தும், அதிகாரிகள் முறையான விளக்கம் அளிக்காமல் தீர்வு காணாமல் இறுதி முடிவுகளை அறிவித்தனர்.. என்று பல்வேறு காரணங்களைதனதுமனுவில்சபின்குறிப்பிட்டு உள்ளார். எனவே ராஜேஷ்குமாரின் வெற்றி செல்லாது என்று அறிவிக்க வேண்டும் என்று கேட்டுள்ளார். மேலும் இந்த விவகாரத்தில் நியாயம் கிடைக்ககோரிவிரைவில்ஹைகோர்ட்டில் தேர்தல் வழக்கு தொடர போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்கு முன் எதிரெதிர் அணியாக இருந்த தவெக மற்றும் காங்கிரஸ், தேர்தலுக்குப் பிறகு ஒரே அணியாக மாறி தற்போது தொடர்ந்து செயல்படும் நிலையில் அமைச்சர் ராஜேஷ்குமாருக்கு எதிராக தவெக நிர்வாகி புகார் மனு அளித்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



# குடிநீர் சுத்திகரிப்பு நிலைய கழிவு நீரை வெளியேற்ற உயரமான ஓடை

## பொதுமக்களின் கோரிக்கைக்கு மேயர் நடவடிக்கை

நாகர்கோவில் ஜூன் 10

நாகர்கோவில் மாநகராட்சி கிருஷ்ணன்கோவில் பகுதியில் அமைந்துள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் பின்புறம் உள்ள குடிநீர் கழிவு நீர் செல்லும் குழாயில் உடைப்பு ஏற்பட்டு அப்பகுதி சாலை வழியாக வெளியேறி குடியிருப்புகளுக்குள் நீர் புகுந்தது இதனால் அப்பகுதியினர் பெறும் அவதிக்கு உள்ளாயினர்.

இச்சம்பவம் அறிந்த மாநகராட்சி பொறுப்பு மேயர் மேரி பிரின்சில்லதா உடனடியாக உடை ப்பை சரி செய்ய உத்தரவிட்டிருந்தார். அதன்படி அப்பகுதியில் ஏற்பட்டிருந்த கழிவு நீர் செல்லும் குழாய் உடைப்பு சரி செய்யப்பட்டது.

இந்நிலையில் நாகர்கோவில் மாநகராட்சி பொறுப்பு மேயர் மேரி பிரின்சிலதா, நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் ஆகியோர் நேற்று கிருஷ்ணன்கோவிலில் உள்ள மாநகராட்சி குடிநீர் சுத்திகரிப்பு நிலைய த்திற்கு சென்று ஆய்வு மேற்கொண்டனர். ஆய்வின்போது குடிநீரின் தரம் மற்றும் நீர் வெளியே கொண்டு செல்லும் குழாய்களின் உறுதித்தன்மை போன்றவைகள் கேட்டறியப்பட்டது. அதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் கழிவு நீர் குழாய் உடைப்பு ஏற்பட்ட பகுதிக்கு சென்று பார்வையிட்டனர். அப்போது அப்பகுதியை சேர்ந்தவர்கள் தினந்தோறும் இப்பகுதியில் அதிகளவில் நீர் வெளியேறுவதால் பாம்பு, தவளை, எலி போன்றவைகள் தங்கள் குடியிருக்கும் வீட்டிற்குள் வருவதாக தெரிவித்து கழிவுநீர் செல்லும் ஓடையை உயரமாக்கி தரும்படி மேயரிடம் கேட்டுக் கொண்டனர்.

பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்றுக்கொண்ட மேயர் உடனடியாக இதற்கான நிரந்தர தீர்வை ஏற்படுத்தி தருவதாக தெரிவித்தார். இந்த ஆய்வின்போது மாமன்ற உறுப்பினர்கள் மேரி ஜெனட் விஜிலா, சேகர் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் உடன் இருந்தனர்.

# சேலம் சரக காவல் துறையின் பழுதடைந்த கணினிகள் ஜூன் 15 ல் ஏலம்

சேலம் ஜூன் 10

சேலம் சரக அலுவலகம் மற்றும் சேலம் மாவட்ட ஆயுதப்படை, காவல் நிலையங்கள் மற்றும் சிறப்பு பிரிவுகளில் உள்ள காலாவதியான பழைய கணினிகள், துணை கருவிகள் மற்றும் சாதனங்களை தற்போது பழுது அடைந்ததின் அடிப்படையில் கழிவு நீக்கம் செய்வதற்காக 15.6. 2026 தேதி காலை சுமார் 10 மணிக்கு சேலம் மாவட்ட ஆயுதப்படை வளாகம் மற்றும் சரக காவல் அலுவலத்தில் ஏலம் விடப்பட உள்ளது . பொதுமக்கள் பார்வைக்கு 11.06.2026 அன்று காலை 10.00 மணி முதல் மதியம் 3.00 மணி வரை சேலம் மாவட்ட ஆயுதப்படை வளாகத்தில் பார்வைக்கு வைக்கப்படுகிறது. மேலும் ஏலத்தில் கலந்து கொள்ள விரும்புவர்கள் அரசு விதிகள் மற்றும் அரசு வழிகாட்டுதலுக்கு இணங்க தகுதி சான்று உள்ள நிறுவனங்கள் மட்டும் பழைய கணினிகள், துணைக் கருவிகள் மற்றும் சாதனங்கள் ஏலம் விடும் நிகழ்ச்சியில் பங்கேற்க அனுமதிக்கப்படுவார்கள். மேலும் ஏலத்தில் பங்கு பெற விருப்பமுள்ளவர்கள் ஏல விடும் நாளன்று காலை ரூ.500/= ஐ முன்வைப்புத் தொகையாக செலுத்தி முன்பதிவு செய்து கொள்ளலாம். சேலத்தில் பங்கேற்று கழிவு பொருட்களை ஏலம் எடுத்தவர்கள் மற்றும் பொருட்களுக்கு உரிய ஜி.எஸ்.டி தொகையுடன் செலுத்தி பொருட்களை பெற்றுக் கொள்ள வேண்டும்.



### அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் செயலாளரும்

# தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் மேல்நிலைப் பொறுப்பாளருமான சூரஜ் ஹெக்டேவின் மறைவையொட்டி திருப்பூர் மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் அஞ்சலி

திருப்பூர்: ஜூன் 10

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் செயலாளரும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் மேல் இட பொறுப்பாளருமானசூரஜ்ஹெக்டே நேற்றைய தினம் உடல் நலத்துறைவால் உயிர் இழந்தார். இந்நிலையில் உயிரிழந்த சூரஜ் டேவின் நினைவை போற்றும் வகையில் திருப்பூர் மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி பார்க் சாலையில் உள்ள காங்கிரஸ் கட்சி அலுவலகமான ராஜீவ் பவன் அரங்கத்தில் மாநகர் மாவட்ட தலைவர். கோபால் சாமி தலைமையில் நடைபெற்றது. முன்னதாக அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த சூரஜ் ஹெக்டேவின் உருவப் படத்திற்கு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் நிர்வாகிகள் மலர் மாலை அணிவித்தும் மலர் தூவியும் மவுன அஞ்சலி செலுத்தினர். இந்த நிகழ்ச்சியில் INTUC மாவட்ட தலைவர். ஈஸ்வரன், மாவட்ட நிர்வாகிகள். பாகநேரி ரவீந்திரன், சிறுபான்மை பிரிவு முபாரக் பாஷா, குருசாமி, சேக் தாவூத், பொன்னுச்சாமி, ராஜேந்திரன், இளைஞர் காங்கிரஸ் மாவட்ட தலைவர். அபிஷேக், துணைத் தலைவர். சந்திப், பிரதீப், மகிலா காங்கிரஸ் மாவட்ட தலைவி. ஆஷா, INTUC ஶ்ரீனிவாசன், பாபு, கோபாலகிருஷ்ணன், பூபதி, பரமசிவம் உள்ளிட்ட காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# தவெக ராமநாதபுரம் மேற்கு மாவட்ட செயலாளர் மதன் வரவேற்பு

## தங்கச்சிமடம், பாம்பன், ராமேஸ்வரத்தில் மீனவர்களை சந்தித்த அமைச்சர்கள்



ராமநாதபுரம், ஜூன் 10

ராமநாதபுரம் மாவட்டத்தில் மீனவர்களின் வாழ்வாதாரம், கடல்சார் பாதுகாப்பு மற்றும் மீன்பிடித் தொழில் தொடர்பான பிரச்சினைகளை நேரில் ஆய்வு செய்வதற்காக, தமிழ்நாடு அரசின் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சர் ஸ்ரீநாத், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் மாசுக்கட்டுப்பாட்டு வாரியத் துறை அமைச்சர் வி.கே. ராஜீவ், ராமநாதபுரம் மேற்கு மாவட்ட கழக செயலாளர் மதன், ராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் சிவகுரு பிரபாகரன் மற்றும் மீன்வளத்துறை அதிகாரிகள் ஆகியோர் இன்று தங்கச்சிமடம், பாம்பன் மற்றும் ராமேஸ்வரம் பகுதிகளுக்கு நேரில் சென்று மீனவர்களை சந்தித்து அவர்களது குறைகள் மற்றும் கோரிக்கைகளை கேட்டறிந்தனர். முன்னதாக, ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அரசு விருந்தினர் மாளிகையில் தங்கியிருந்த அமைச்சர்களை, தமிழக வெற்றிக் கழகத்தின் ராமநாதபுரம் மேற்கு மாவட்ட கழக செயலாளர் மதன் மரியாதை நிமித்தமாக சந்தித்து வரவேற்று வாழ்த்து தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து தங்கச்சிமடம், பாம்பன் மற்றும் ராமேஸ்வரம் மீனவ கிராமங்களுக்கு நேரில் சென்ற அமைச்சர்கள், மீனவ பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களுடன் கலந்துரையாடி, கடலுக்குச் செல்லும் மீனவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள், மீன்பிடி துறைமுக வசதிகள், மீனவர் நலத்திட்டங்கள், கடல்சார் பாதுகாப்பு, இலங்கை கடற்படை தொடர்பான பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்து கேட்டறிந்தனர்.

மீனவர்களின் கோரிக்கைகளை அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர்கள் உறுதியளித்தனர். மேலும், மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தமிழக அரசு தொடர்ந்து பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும் தெரிவித்தனர். இந்த நிகழ்வில் அரசு அதிகாரிகள், மீன்வளத்துறை அலுவலர்கள், மீனவர் சங்க நிர்வாகிகள் மற்றும் தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# திருப்பூரில் போக்குவரத்து மாற்றம்




திருப்பூர், ஜூன் 10

திருப்பூர் மாநகரில் குடிநீர் குழாய் பதிக்கும் பணிகள் 10.06.2026 ஆம் தேதி புதன் கிழமை காலை 6 மணி முதல், திருப்பூர் மாநகர காவல் ஆணையாளர் அலுவலகம் முதல் பங்களா ஸ்டாப் பேருந்து நிறுத்தம் வரை தொடர்ந்து சுமார் 20 நாட்கள் பணிகள் நடைபெற உள்ளதால், அவிநாசியிலிருந்து திருப்பூர் நோக்கி வரும் வாகனங்களுக்கு கீழ்க்கண்டவாறு போக்குவரத்து மாற்றம் செய்யப்பட உள்ளது.

அவிநாசியிலிருந்து திருப்பூர் பழைய பேருந்து நிலையம், புஷ்பா ஜங்சன், ஊத்துக்குளி, பல்லடம், மங்கலம், காங்கேயம் மற்றும் தாராபுரம் செல்ல இருசக்கர, நான்கு சக்கர வாகனங்கள், பேருந்துகள் மற்றும் கனரக வாகனங்கள் அனைத்தும், காவல் ஆணையர் அலுவலகம் வழியாக இடதுப்புறம் திரும்பி, 60 அடி ரோடு வழியாக, PN ரோட்டை அடைந்து, KVB ஜங்சன் வழியாக வலதுப்புறம் திரும்பி செல்ல வேண்டும்.

அவிநாசி ரோடு வழியாக வரும் வாகனங்கள் குமார் நகர் மற்றும் சாமுண்டிபுரம் செல்ல, காவல் ஆணையர் அலுவலகம் வழியாக இடதுப்புறம் திரும்பி, 60 அடி ரோடு வழியாக, PN. ரோட்டை அடைந்து, KVBஜங்சன்வழியாகவலதுப்புறம்திரும்பி, மில்லர் சந்திப்புக்கு முன் உள்ள ராம் நகர் 3 வது வீதியின் வழியாக வலதுப்புறம் திரும்பி, பங்களா ஸ்டாப் சென்று, வலதுப்புறம் திரும்பி குமார் நகர் மற்றும் சாமுண்டிபுரம் செல்லலாம்.

அங்கேரிபாளையத்திலிருந்து வரும் வாகனங்கள், பழைய பேருந்து நிலையம், புஷ்பா ஜங்சன், ஊத்துக்குளி, பல்லடம், மங்கலம், காங்கேயம் மற்றும் தாராபுரம் செல்ல, காவல் ஆணையர் அலுவலகம் வழியாக இடதுப்புறம் திரும்பி, 60 அடி ரோடு வழியாக, PN. ரோட்டை அடைந்து, KVB ஜங்சன் வழியாக வலதுப்புறம் திரும்பி செல்ல வேண்டும்.

திருப்பூரில் மேற்கண்ட போக்குவரத்து மாற்றங்களுக்கு பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டுநர்கள் அனைவரும் ஒத்துழைப்பு தருமாறு போக்குவரத்து காவல்துறையினர் சார்பாக கேட்டுகொள்ளப்படுகிறது.

### தோவாளையில்

# எஸ்ஐ மீது நாயை ஏவி கடிக்க வைத்த கணவன், மனைவி

## 3 பிரிவுகளில் வழக்கு பதிவு



நாகர்கோவில், ஜூன். 10

இரணியல் அருகே மேற்கு நெய்யூர் பகுதியை சேர்ந்தவர் பிரின்ஸ் ராஜ் (31) ஜவுளி வியாபாரம் செய்து வருகிறார். இவரது சித்தி மகள் கிருஷ்ணவேணி (25). இவரது கணவர் நாகசுமன் ( 26) என்பவர்கள் ஆரல்வாய்மொழி அருகே உள்ள தோவாளை பகுதியில் வசித்து வருகிறார்கள். இந்த நிலையில் பிரின்ஸ் ராஜ் ஜவுளிக்கடை நடத்தியதில் நஷ்டம் ஏற்பட்டது. இது பற்றி அறிந்த கிருஷ்ணவேணி பிரின்ஸ் ராஜிடம் தனது கணவர் நாகசுமன் வழக்கறிஞர் என்றும், பிரின்ஸ்ராஜ் மாமனார் சொத்தை நீதிமன்றத்தில் வழக்கு போட்டு வாங்கி தருவதாகவும் கூறியுள்ளார். இதற்காக பிரின்ஸ் ராகிடம் ரூ.5 லட்சத்து 93 ஆயிரத்து 390 ரூபாய் பணம், மற்றும் ரூ 8 லட்சம் மதிப்புடைய சொகுசுகார் ஆகியவற்றை வாங்கிக்கொண்டு நீதிமன்றத்தில் எந்தவித வழக்கும் போடாமல் ஏமாற்றியதாக கூறப்படுகிறது.

இதனால் அதிர்ச்சி அடைந்த பிரின்ஸ் ராஜ் இது சம்பந்தமாக கேட்டபோது, அவரை மிரட்டி பணம் தர முடியாது என தெரிவித்துள்ளனர். இது குறித்து ஆரல்வாய்போலீஸ் நிலையத்தில் பிரின்ஸ் ராஜ் புகார் அளித்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து காரை பறிமுதல் செய்தனர்.

இதற்கிடையில் போலீஸ் தேடி வந்த நாகசுமன், அவரது மனைவி கிருஷ்ணவேணி ஆகியோர் தோவாளையில் வீட்டில் இருப்பதாக போலீசருக்கு தகவல் கிடைத்ததால் இன்ஸ்பெக்டர் பச்சைமால், சப்இன்ஸ்பெக்டர் அனுஜன் மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்றனர். அப்போது நாகசுமன் தப்பிக்க முயன்றார். மனைவி கிருஷ்ணவேணி போலீசாரை உள்ளே செல்ல விடாமல் தடுத்து, தகாத வார்த்தைகளால் திட்டி உள்ளார். மேலும் போலீசார் மீது கிருஷ்ணவேணி தன்னுடைய நாயை ஏவி உள்ளார். அந்த நாய் சப்இன்ஸ்பெக்டர் அனுஜனை கடித்து குதறியது. இதில் அவருக்கு இரத்த காயம் ஏற்பட்டது.

பின்னர் கணவன் மனைவி இருவரையும் போலீசார் கைது செய்தனர். பின்னர் உடல்நிலை சரியில்லை என கூறியதால் இருவரும் குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். மருத்துவ பரிசோதனை பின் அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்படுவார்கள் என போலீஸ் தரப்பில் கூறப்படுகிறது.

போலீசாரை தகாத வார்த்தைகளால் திட்டி, நாயை ஏவி விட்டு அரசு பணி செய்து விடாமல் தடுத்ததாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மொத்தம் 3 பிரிவுகள் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட நாகசுமன் மீது மதுரை தெப்பக்குளம், அண்ணா நகர், நீலகிரி மாவட்டம் ஊட்டி, நெல்லை நாங்குநேரி, திருப்பூர் மடத்துக்குளம் போலீஸ் நிலையங்களில் பல்வேறு வழக்குகள் உள்ளனதாக தெரியவந்துள்ளது.

### சிறுமி பாலியல் வழக்கு

# குற்றவாளிக்கு 14 வருடம் சிறை தண்டனை



நாகர்கோவில், ஜூன். 10

குமரி மாவட்டத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்ற வழக்குகளில் விரைவில் விசாரணை முடித்து குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்வதையும் அவ்வழக்குகளில் நீதிமன்ற விசாரணையை கண்காணித்தல், பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு அளித்தல் ஆகிய செயல்பாடுகள் மூலம் குற்றவா ளிக்கு தண்டனை பெற்றுத்தரு வதை உறுதி செய்ய வேண்டும் என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இந்நிலையில் கடந்த 2019 ஆம் ஆண்டு ஞானதாசபுரம் அண்ணா காலனி பகுதியை சேர்ந்த ஜெரின்(29) என்பவர் 9 வயதுடைய சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த குற்றத்திற்காக மார்த்தாண்டம்அனைத்துமகளிர்காவல்நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை செய்து குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு விசாரணை நாகர்கோவில் போக்சோ நீதிமன்றத்தில் நடந்து வந்தது இந்நிலையில் நீதிபதி இக்குற்றத்தில் ஈடுபட்ட குற்றவாளிக்கு 14 வருடம் சிறை தண்டனை மற்றும் 6,000 ரூபாய் அபராதம் விதித்து தீர்ப்பு அளித்தார்.

நீதிமன்ற வழக்கு விசாரணை மற்றும் சாட்சிகள் விசாரணை ஆகியவற்றில் சிறப்பாக செயல்பட்டு குற்றவாளிகளுக்குதண்டனைவாங்கித்தரகாரணமாக இருந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரிகள், அரசு வழக்கறிஞர், நீதிமன்ற காவலர்

இந்த வழக்கின் நீதிமன்ற விசாரணை முறையாக கண்காணித்த மார்த்தாண்டம் உட்கோட்ட துணை காவல்கண்காணிப்பாளர், மார்த்தாண்டம் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் ஆகியோரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பாராட்டினார்.

## சேலம் மாவட்டத்தில்

# கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தால் அறிவிக்கப்பட்ட கால்நடை மருத்துவ ஆலோசகர் பணி

சேலம் ஜூன் 10

சேலம் மாவட்டம் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் பிரதம கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களிடமிருந்து தினமும் 6.80 லட்சம் லிட்டர் பாலை கொள்முதல் செய்து வருகிறது. பால் உற்பத்தியாளர்களின் கால்நடைகளுக்கு தேவையான வாராந்திர கால்நடை சிகிச்சை, அவசரகால சிகிச்சைகள், கால்நடை காப்பீடு மற்றும் அரசு திட்டங்களை தங்கு தடையின்றி கொண்டு சேர்க்கும் வகையில் கால்நடைகளுக்கு சிகிச்சைகள் மேற்கொள்ள தற்சமயம் காலியாக உள்ள கால்நடை மருத்துவ ஆலோசகர் பணிக்கு ஒன்றியத்தின் மூலம் நியமனம் மேற்கொள்ளப்பட உள்ளது .தகுதி வாய்ந்த நபர் ஒருவர் ஒருவரை தேர்ந்தெடுக்கும் வகையில் வருகின்ற 11.06.2026 அன்று காலை 10 மணி அளவில் சேலம் பால்பண்ணை வளாகம், சித்தனூர், தளவாய்பட்டி அஞ்சல் ,சேலம் 636 302 . மேற்காணும் சேலம் பால்பண்ணை வளாகப்பயிற்சிநிலையத்தில் நடைபெற உள்ளது. தேர்வுக்கு வரும் தேர்வர்கள் தகுந்த ஆவணங்களுடன் நேரில் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகிறது.

## கிருஷ்ணகிரியில்

# அரசு, தனியார் பள்ளிகளில் அதிகளவில் மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு ஊக்கத்தொகை

### அனைத்து நுகர்வோர் உரிமை பாதுகாப்பு அமைப்பு அறக்கட்டளையின் மாநில தலைவர் வழங்கினார்



கிருஷ்ணகிரி ஜூன் 10

கிருஷ்ணகிரியில் அனைத்தும் நுகர்வோர் உரிமை பாதுகாப்பு அமைப்பு அறக்கட்டளை சார்பில் மாவட்ட அளவில் அரசு,தனியார் பள்ளிகளில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு மற்றும் உயர்கல்வி படிக்கும் ஏழை எளிய மாணவர்களுக்கும், ஆதரவற்ற உடல் நிலை பாதிக்கப்பட்ட நபர்களுக்கும் நலத்திட்ட உதவிகள், ஊக்கத்தொகை வழங்கும் நிகழ்ச்சி குந்தாரப்பள்ளியில் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. தமிழ் தாய் வாழ்த்து பாடலுடன் துவங்கிய நிகழ்ச்சியை மாநில துணை செயலாளர் சேகர் வரவேற்புரை ஆற்றினார். இவ்விழாவினை மாநில செயலாளர் திருமதி. ஆனந்தி அப்பாதுரை குத்து விளக்கு ஏற்றி விழாவினை துவக்கி வைத்தார். மாநில ஒருங்கிணைப்பாளர் மனோகர், மாநில துணை தலைவர் பன்னீர்செல்வம், ஆகியோர் வாழ்த்துரை ஆற்றினார். மாநில துணை தலைவர் டாக்டர் பன்னீர்செல்வம், மாநில துணைச்செயலாளர் சேகர், மாநில பெருலாளர் தேவராஜ், மாநில ஒருங்கினைப்பாளர் மனோகரன், மாநில மக்கள்தொடர்ப்பு அலுவலர் இளவரசி மற்றும் மாவட்ட தலைவர்களான சுபாஷ் , நாகமணி, குமார், சேட்டு ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில தலைவரும், அமைப்பின் நிறுவனருமான எல்.அப்பாதுரை நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார்.

பின்னர் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் கடந்தாண்டு 12 மற்றும் 10ம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்ற முதல் மூன்று இடங்களை பிடித்த 8 மாணவ, மாணவிகளுக்கு தலாஐந்து ஆயிரம், நான்கு ஆயிரம், மூன்று ஆயிரம்,

ஊக்க தொகையாகவும், கல்லூரில் படிக்கும் ஏழை எளிய மாணவர்கள் 4 பேருக்கு கல்வி உதவி தொகையும், ஆதரவற்ற மற்றும் உடல் நலன் பாதிக்கப்பட்ட 13 நபர்களுக்கு, தலா 4 ஆயிரம் மதிப்புள்ள உணவுப்பொருள் போன்றவற்றை மாநில தலைவர் அப்பாதுரை வழங்கினார்.இந்த நிகழ்ச்சியின் முடிவில் மாவட்ட தலைவர் சுபாஷ் நன்றி கூறினார். இறுதியில் மாணவர்கள் பங்கேற்ற கலை நிகழ்ச்சிகளும், அறுசுவை உணவும் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி தருமபுரி திருப்பத்தூர், ஆகிய இடங்களில் இருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துக் கொண்டனர்.

## கூத்தம்பாளையத்தில்

# தனக்கு சொந்தமான இடத்தை, வாடகைக்கு இருந்த நபர் காலி செய்ய மறுத்து மிரட்டல் விடுப்பதால் 30க்கும் மேற்பட்டவர்கள் தர்ணா



திருப்பூர். ஜூன் . 10

திருப்பூர் அருகே கூத்தம்பாளையம் பகுதியில் ஆனந்த் பாக்கியலட்சுமி ஆகிய தம்பதியினருக்கு சொந்தமான ஐந்தரை சென்ட் இடத்தில் தார்சு கட்டிடத்தை பாலமுருகன் என்பவருக்கு வாடகைக்கு கொடுத்துள்ளார், இவர் இந்த கட்டிடத்தில் பனியன் வேஸ்ட் வியாபாரம் செய்வதாக கூறிக்கொண்டு அதில் சட்டத்திற்கு புறம்பாக சீட்டாட்டம் கிளப் நடத்தியும் இரவு நேரங்களில் சந்தேகப்படும்படியான நபர்கள் அதிக அளவில் வந்து செல்வதும், சேவல் சண்டைக்கு பயன்படுத்தும் கோழிகள் வளர்ப்பு போன்ற சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டு வந்துள்ளார்,

மேலும் கடந்த ஒரு வருட காலமாக வாடகை பணமும் தருவதில்லை கட்டிடத்திற்கு கொடுத்த அட்வான்ஸ் தொகையும் கழிந்து விட்டது இதனை கேட்கச் சென்ற வீட்டு கட்டிடத்தின் உரிமையாளர் பாக்கியலட்சுமியை தகாத வார்த்தைகளால் திட்டி மிரட்டல் விடுத்துள்ளார் ,

இதனால் பாதிக்கப்பட்ட ஆனந்த் பாக்கியலட்சுமி தம்பதியினர் தங்களது வீட்டைமீட்டுதரகோரிதிருமுருகன்பூண்டி போலீசாரிடம் புகார் தெரிவித்துள்ளனர், இந்தபுகாரின்அடிப்படையில்காவல்துறையினர் விசாரித்து 3 மாத கால அவகாசம் கொடுக்கும்படி கூறியுள்ளனர்.இதனை ஏற்ற ஆனந்த் குடும்பத்தினர் கால அவகாசம் கொடுத்து காத்திருந்தனர்,ஆனால் வாடகைதாரர் ஆன பாலமுருகன் வீட்டை காலி செய்யாமல் காலம் கடத்தி வந்துள்ளார், இந்நிலையில் மன உளைச்சலுக்கு ஆளான ஆனந்த் மீண்டும் காவல்துறையை அணுகும் பொழுது காவல்துறையினர் புகார் கொடுத்த ஆனந்துக்கு எதிராகவும் பாலமுருகனுக்கு ஆதரவாக பேசி உள்ளனர். இந்நிலையில் வீட்டு பத்திரத்தை வைத்து 10 லட்ச ரூபாய் கடன் பெற்ற தனியார் நிதி நிறுவனம் இந்த கட்டிடத்தை ஜப்தி செய்வதாக நோட்டீஸ் ஒட்டி உள்ளனர்.இதனால் மன உளைச்சலுக்கு ஆளான ஆனந்த்,பாக்கியலட்சுமி ஆகியோர் தனது உறவினர்கள் 30க்கும் மேற்பட்டவர்களுடன் கட்டிடத்தின் முன்பு தரையில் அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார். மேலும் பாதிக்கப்பட்ட ஆனந்த் குடும்பத்தினர் செய்தியாளர்களிடம் கூறுகையில்,

தங்களது கட்டிடத்தில் பாலமுருகன் என்பவர் பனியன்கம்பெனி வைப்பதற்கு என்று கூறி விட்டு அங்கு சீட்டாட்டம் சேவல் சண்டை போன்ற சமூக விரோத செயல்களில் ஈடுபட்டு வந்ததாகவும் வாடகையை கேட்கும் பொழுது கொலை மிரட்டல் விடுத்து தகாத வார்த்தைகளால் பேசியதாகவும் காவல்துறையினர் பாலமுருகனுக்கு சாதகமாக பேசி தங்களது சொத்தை பாலமுருகன் ஆக்கிரமித்துக் கொண்டு இருப்பதற்கு காவல்துறையினர் உடந்தையாக இருப்பதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் குற்றம் சாட்டு தெரிவித்தனர்.

திருப்பூர் அருகே கூத்தம்பாளையம் பகுதியில் சொந்த இடத்தை மீட்டு தர கோரி தனது உறவினர்களுடன் கணவன் மனைவிதர்ணாபோராட்டத்தில்ஈடுபட்டது அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.




## நாகர்கோவிலில்

# விபத்துகளை தடுக்க காவல் ஏ ஐ தொழில்நுட்ப திட்டம்

### மாவட்ட காவல் கண்காணிப்பாளர் துவக்கி வைத்தார்

நாகர்கோவில், ஜூன்.10

கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் சாலைப் பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு நவீன தொழில்நுட்பத் திட்டங்களை அறிமுகப்படுத்தி வருகிறார்.

அதன் தொடர்ச்சியாக, நேற்று 8ம் தேதி நாகர்கோவில் மாவட்ட ஆட்சியர் அலுவலக ரவுண்டானாவில், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துடன் செயல்படும் காவல் ஏ ஐ திட்டத்தை தொடங்கி வைத்தார்.

முதல் கட்டமாக மாவட்ட ஆட்சியர் அலுவலக சந்திப்பில், சாலைகளின் நான்கு திசைகளிலும் ஏ ஐ தொழில்நுட்பத்துடன் கூடிய அதிநவீன கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. இவைகள் போக்குவரத்து விதிமீறல்களை தானாகவே கண்டறியும் திறன் கொண்டவை.

விதிமீறலில் ஈடுபடும் வாகனங்களின் பதிவு எண்கள் சந்திப்பில் அமைக்கப்பட்டுள்ள டிஜிட்டல் மானிட்டரில் உடனுக்குடன் காட்சிப்படுத்தப்படும். மேலும், விதிமீறலின் தன்மைக்கேற்ப அபராத நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

இத்திட்டம் சென்னை ராஜலட்சுமி பொறியியல் கல்லூரி மாணவர்கள் மற்றும் கன்னியாகுமரி மாவட்ட காவல் துறை இணைந்து மேற்கொண்டுள்ள புதுமையான கூட்டு முயற்சியின் மூலம் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது. சிறப்பாக இந்த ஏ ஐ செயலியை வடிவமைத்த சென்னை ராஜலட்சுமி பொறியியல் கல்லூரி மாணவர்களை சான்றிதழ் வழங்கி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் பாராட்டினார்.

இந்த முயற்சி மூலம் போக்குவரத்து விதிமீறல்களை குறைத்து, விபத்துகளையும் உயிரிழப்புகளையும் தடுப்பதுடன், பொதுமக்களிடையே சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வை மேலும் வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிகழ்ச்சியில் நாகர்கோவில் உட்கோட்ட துணைக் காவல் கண்காணிப்பாளர் இளஞ்செழியன், போக்குவரத்து ஆய்வாளர் அருண், உதவி ஆய்வாளர் அசோக் மற்றும் ராஜலட்சுமி பொறியியல் கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர்.

## குளச்சல் கடலோரப் பகுதியில்

# புகையிலை விற்பனை செய்த 2 கடைகளுக்கு சீல்

### உணவு பாதுகாப்புத்துறை நடவடிக்கை



குளச்சல் ஜூன் 10

குளச்சல் காவல் நிலைய போலீசார், நகராட்சி அலுவலர்கள் மற்றும் உணவு பாதுகாப்பு அதிகாரிகள் ஆகியோர் ஒன்றிணைந்து நேற்று குளச்சல் பேருந்து நிலையம், பள்ளிக்கூடம், கல்லூரி போன்றவற்றின் அருகில் உள்ள கடைகளில் புகையிலை, போதை பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றனவா என சோதனை மேற்கொண்டனர். மேலும் பள்ளிகூடங்கள் அருகிலும் 100 மீட்டர் தொலை தூரத்திற்கு புகையிலை, போதைப் பொருட்கள் மற்றும் சிசர்கள் விற்பனை செய்யக்கூடாது எனவும் கடைகளுக்கு அறிவுறுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்தினர். கடலோர பகுதிகளான சைமன் காலனி, கோடிமுனை வாணியக்குடி, குறும்பனை ஆகிய பகுதிகளில் மேற்கொண்ட சோதனையின் போது இரண்டு கடைகளில் புகையிலை கண்டெடுக்கப்பட்டு உணவுத்துறை அதிகாரிகளால் இரண்டு கடைகளுக்கு சீல் வைக்கப்பட்டது. இந்த சோதனையில் குளச்சல் நகராட்சி ஆணையர் கோபாலகிருஷ்ணன், காவல் நிலைய இன்ஸ்பெக்டர் ஷேக் அப்துல் காதர், மற்றும் உணவு பாதுகாப்பு அதிகாரி ராஜாராம் ஆகியோர் உடனிருந்தனர்.

## திருச்சி

# மழை நீர் வடிகால் வாய்க்காலில் ஆண் சடலம்

திருச்சி, ஜூன் 10

திருச்சி தீரன்நகர் அருகே திண்டுக்கல் பிரதான சாலையில் உள்ள மழைநீர் வடிகால் வாய்க்காலில் சுமார் 50 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலம் இன்று கண்டெடுக்கப்பட்டது. இதைக்கண்ட அப்பகுதி மக்கள் உடனடியாக கண்டோன்மென்ட் காவல் நிலைய போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்திற்கு விரைந்த போலீசார், உயிரிழந்தவரின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். மேலும், உயிரிழந்தவர் யார் என்பது குறித்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



## மயிலாடி றிங்கல்தௌபே அரசு பள்ளியில்

# மாணவ மாணவிகளுக்கு தமிழக வெற்றிக் கழகம் சார்பாக ஊக்கதொகை

அஞ்சுகிராமம்,ஜூன் 10

அகஸ்தீஸ்வரம் ஒன்றியம் தமிழக வெற்றிக் கழகம் சார்பாக ஊக்கதொகை மயிலாடி றிங்கல்தௌபே அரசு மேல்நிலை பள்ளியில் 10 மற்றும் 12ம் வகுப்பு தேர்வில் வெற்றி பெற்று முதல் மூன்று மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகளுக்கும் தனிப்பாடத்தில் 100 மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகளுக்கும் பரிசு வழங்கும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது

இதில் பத்தாம் வகுப்பில் முதல் மூன்று இடத்திற்கு வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு 1மார்க் 5000,2மார்க் 3000,3மார்க் 2000 ரூபாய் பரிசுத் தொகையாகவும் 12ம் வகுப்பில் 1மார்க் 5000,2மார்க் 3000, 3மார்க் 2000 பரிசுத் தொகையாகவும் மற்றும் கம்யூப்டர் சயின்ஸ் பாடப்பிரிவில் 100/100 மதிப்பெண் பெற்ற மாணவருக்கு 2000/ரூபாய் ஊக்கத்தொகையினை வழங்கப்பட்டது இந்நிகழ்ச்சிக்கு அகஸ்தீஸ்வரம் ஒன்றிய செயலாளர் எட்வின், மயிலாடி பேரூராட்சி செயலாளர் விஜய் இணை செயலாளர் சுரேஷ், பொருளாளர் பிரவின் ஆகியோர் முன்னிலை வகித்தனர் தலைமையேற்று பரிசுகளை மாவட்ட செயலாளர் மாதவன் வழங்கினார் சிறப்பு விருந்தினராக காங்கிரஸ் மாவட்டத் தலைவர் கே டி உதயம், காங்கிரஸ் வட்டார தலைவர் தங்கம் நடேசன் மற்றும் பள்ளி தாளாளர் ஜெரோம் எபின், பள்ளி தலைமை ஆசிரியர் புஷ்பலதா மற்றும் ஒன்றிய, நகர, பேரூராட்சி, ஊராட்சி, கிளைகழகதோழர்கள்கலந்துகொண்டனர்.

## கார் பார்க்கிங் செல்லும் பாதையா இது?

# கன்னியாகுமரிக்கு வந்து நொந்து செல்லும் சுற்றுலா பயணிகள்: ஆட்சியர் நடவடிக்கை எடுக்க கோரிக்கை



நாகர்கோவில் ஜூன் 10

உலக பிரசித்தி பெற்ற இந்தியாவின் தென்கோடியில் அமைந்துள்ள சுற்றுலாத்தலமான கன்னியாகுமரிக்கு தினந்தோறும் பல்லாயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வந்து பார்வையிடுகின்றனர். இந்த சுற்றுலா பயணிகளில் பெரும்பாலானவர்கள் வெளிநாடு மற்றும் வெளி மாநிலங்களில் இருந்தும் அதிகமாக வருகின்றனர் இவர்கள் விமான நிலையம், ரயில் நிலையம் போன்றவற்றில் வந்து இறங்கி அங்கிருந்து வாடகை கார் மூலம் கன்னியாகுமரிக்கு வருகின்றனர். மேலும் சிலர் அண்டை மாநிலங்களிலிருந்து தங்கள் சொந்த கார் மூலம் வருவது வழக்கம்.

அவ்வாறு கன்னியாகுமரிக்கு வரும் சுற்றுலா பயணிகள் தங்கள் வரும் வாகனங்களை நிறுத்துவதற்கு சரியான பார்க்கின் வசதி இல்லாமல் பெரும் இன்னலுக்கு உள்ளாகி வருகின்றனர். கன்னியாகுமரி சுற்றுலா தளத்தில் வாகனங்களை நிறுத்துவதற்கு உள்ள பீச் ரோடு பார்க்கிங்கில் கன்னியாகுமரி நகராட்சியால் கார் பார்க்கில் வசதி செய்து தரப்பட்டுள்ளது ஆனால் சுற்றுலா பயணிகளின் வாகனங்கள் கார் பார்க்கிங்யில் உள்ளே செல்ல முடியாத அளவிற்கு அதன் நுழைவு பழுதடைந்து இருப்பதால் உள்ளே செல்லும் கார் வேன் போன்றவற்றின் அடிப்பாகங்கள் தட்டி உடைகின்றன. தினம்தோறும் ஆயிரக்கணக்கில் பார்வையாளர்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் வந்து செல்லும் கன்னியாகுமரியில் வாகனங்கள் நிறுத்துவதற்கு இடம் இருந்தும் பார்கிங் கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கன்னியாகுமரி நகராட்சி வருமானத்தில் முக்கிய பங்காக இருந்து வரும் சுற்றுலாத்தளத்தில் வாகனங்கள் நிறுத்துவதற்கான பார்க்கிங் செல்வதற்கான பாதையை நகராட்சியால் சரி செய்ய முடியாத நிலை மிகவும் வேதனை அளிப்பதாக சுற்றுலா பயணிகள், சுற்றுலா பயணிகளின் வாகன ஓட்டிகள் தங்கள் வேதனையை தெரிவித்து வருகின்றனர்.

மேலும் இதுகுறித்து அண்டை மாநிலமான கேரளாவை சேர்ந்த ஒரு சுற்றுலா பயணி கூறியதாவது: உலகப் புகழ் பெற்ற சுற்றுலாதளம் என அனைவராலும் அறியப்பட்ட கன்னியாகுமரிக்கு நாங்கள் குடும்பமாக முதல்முறையாக வந்துள்ளோம். இங்கு வந்தால் கார் நிறுத்துவதற்கு சரியான பார்க்கிங் இருந்தும் எங்களுடைய காரை பார்க்கிங் கொண்டு செல்ல முடியவில்லை காரணம் என்னுடைய கார் சிறியது இந்த கரடு முரடான வழியாக கொண்டு சென்றால் அடியில் பிடித்து காரின் சில பாகங்கள் உடைந்துவிடும் எனவே நாங்கள் வெளியே நிறுத்தி உள்ளோம். நாங்கள் கார் நிறுத்தி உள்ள பகுதி போக்குவரத்து காவல்துறையால் நோ பார்க்கிங் என குறிப்பிட்டு இருந்த பகுதியாகும். இருந்தும் வேறு வழி இல்லாமல் அங்கே நிறுத்தி உள்ளோம் போக்குவரத்து காவல்துறை நிச்சயம் எங்களுக்கு அபராதம் விதிப்பார்கள் வேறு வழி இல்லை கன்னியாகுமரியை பார்க்க வேண்டும் என்ற ஆசை எவ்வளவு பெரியதாக இருந்ததோ அதே போல ஏன் இங்கு வந்தோம் என்று எண்ணம் தோன்றி விட்டது.

ஒருமுறை வந்தவர்கள் மறுமுறை இப்பகுதிக்கு வர வேண்டுமானால் நகராட்சி சுற்றுலாத்தலத்தை தூய்மையாகவும், சுற்றுலா பயணிகளுக்கும் அவர்களுடைய வாகனங்களுக்கும் சிறப்பான பார்க்கங்கை ஏற்படுத்தி பாதுகாப்பை வழங்க வேண்டும் என தெரிவித்த அவர் நகராட்சி நடவடிக்கை எடுக்குமா என்பது தெரியாது ஆனால் மாவட்ட நிர்வாகம் இந்த பிரச்சனையில் தனி கவனம் செலுத்தி நடவடிக்கை எடுத்தால் மட்டுமே சுற்றுலாத்தலமான கன்னியாகுமரிக்கு பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் அதிக அளவில் வருவார்கள் எனவே சுற்றுலா பயணிகளின் நலனில் மாவட்ட ஆட்சியர் தனி கவனம் செலுத்தி பார்க்கிங் பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டும் அதுவே எங்களுடைய கோரிக்கை எனவும் அவர் தெரிவித்தார்.

# சமூகப் பணியாளர் டாக்டர் டார்வின் மோசஸ்க்கு "சமூக தாக்கச் சாதனையாளர் விருது"



நாகர்கோவில் ஜூன் 10

குமரி மாவட்ட சமூக பணியாளருக்கு விருது. கோவையில் நடைபெற்ற குடியிருப்போர் விழிப்புணர்வு சங்கம் தனது 20வது ஆண்டு சமூகப் பணி விழாவில், சமூக முன்னேற்றத்திற்காக சிறப்பாக சேவையாற்றிய 35 பேருக்கு சமூக தாக்கச் சாதனையாளர் விருது" வழங்கி கௌரவித்தது.

அதில், கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த சமூகப் பணியாளர் டாக்டர் ஹெச். டார்வின் மோசஸ்க்கு சமூக மேம்பாடு, மாற்றுத்திறனாளிகள் மற்றும் குழந்தைகள் அதிகாரப்படுத்தல் துறைகளில் ஆற்றிய பங்களிப்பிற்காக விருது வழங்கப்பட்டது. தனது சிறப்பான சமூக சேவைக்கான வழங்கப்பட்ட விருதினை அவர் பெற்றுக் கொண்டார்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.